[5th November 1965

கனம் திரு. பூ. கக்கன் : தாலூகாவுக்கு ஒரு தாசில்தார் என்பது பிரச்னை அல்ல. எங்கு ஜாஸ்தி வேலை இருக்கிறதோ, எங்கு ஜாஸ்தி அக்வயர் செய்ய வேண்டியிருக்கிறதோ அங்கு அதிகமாக தாசில்தார்கள் நியமித்து உதவி செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : அது மட்டும் காரணம் இல்லாமல் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஸ்பெஷல் ஆர்.ஐ.-ஆக இருப்பதால் சங்கடம் ஏற்படுகிறது. ஆறு மாதங்களுக்கு ஒரு ஆர்.ஐ. என்பதை மாற்றி ரெகுலர் யூ.டி.-யாக இருக்கச் செய்வதற்கு அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

விரிஞ்சிபுரம் ஹரிஜன கைக்குத்தலரிசித் தொழிலாளர் கூட்டுறவு சங்கம்

*299 கேள்வி.—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உள் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) வடாற்காடு மாவட்டம், விரிஞ்சிபுரத்தில் உள்ள Harijan Handpounding Workers Cottage Industrial Co-operative Society, Limited

ஹரிஜனங்களுக்காகப் பிரத்தியேகமாக நிறுவப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதில் ஹரிஜனங்களல்லாதவர்களும் அனுமதிக்கப்பட்டு இருப்பதன் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) வினு எழவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும்போது இல்லை என்று சொல்லுகிறார்கள். இந்த ஆண்டு நாங்கள் எஸ்டிமேட் கமிட்டியோடு சென்றிருந்த போது நேரிலே கண்டது, பார்த்து விசாரித்தது ஹரிஜனங்கள் யாரும் இல்லை என்பதாகும். ஹரிஜனங்கள் பேரால் வைத்துக்கொண்டு ஹரிஜனங்களுக்கு வேலை இல்லாமல் சங்கம் இயங்கலாமா என்பதுதான் எனது கேள்வி.

கனம் திரு. பூ. கக்கன் : ஹரிஜனங்கள் இருக்கிறார்கள்.

Now the Society is having thirty members on its rolls and twenty of them are Harijans. The representation of Harijans in the membership works out to about 67 per cent.

தீண்டாமை ஒழிப்பு

*300 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) 1964-ம் ஆண்டில் ஹரிஜன நலத்துறையினரால் சாதி ஒழிப்புப் பிரச்சாரம் சம்பந்தமாக நடத்தப்பட்ட நாடகங்கள் எத்தனை ?